# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1810/20 - 2013 මැයි මස 13 වැනි සඳුදා - 2013.05.13

*1810/20 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ 2/2012.*

***1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம்***

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின்கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

காமினி லொக்குகே,<br>
*தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்.*

கொழும்பு,<br>
*2013.05.13.*

**ஒழுங்குவிதிகள்**

*1958 ஆம் ஆண்டு ஒற்றோபர் 31 ஆந் திகதிய 11,573 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான 1958 ஆம் ஆண்டின் ஊழியர் சகாய நிதிய ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*

*(1) 6 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்–*

*"6அ. (1) (அ) ஊழியரொருவர், சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் உறுப்பினராக வருமிடத்து, தொழில் ஆணையாளர் தலைமையதிபதி, காலத்துக்குக்காலம் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒவ்வொரு வலயம் தொடர்பிலும் அத்தகைய ஊழியரைக் குறிக்கின்ற அடையாளங்காணல் இலக்கமொன்றாக 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் ஆட்களைப் பதிவுசெய்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறித்தளித்தல் வேண்டும் :*

*ஆயின், எவ்வாறாயினும், தொழில் ஆணையாளர் தலைமையதிபதி, தேசிய அடையாள அட்டையை உடைமையில் வைத்திருக்காத ஊழியரொருவர் தொடர்பில் அடையாளங்காணல் இலக்கமொன்றைக் குறித்தளித்தல் வேண்டும்.*

*(ஆ) தொழில் ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய ஊழியர் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் உறுப்பினரொருவராக வரும்போது, அத்தகைய ஊழியரின் ஒரு தொழில்தருநருக்கு முழு எண்ணான இலக்கமொன்றையும் ஆங்கில நெடுங்கணக்கிலுள்ள எழுத்தொன்றையும் குறித்தளித்தல் வேண்டும்.*

(2) தொழில்தருநர் ஒவ்வொருவரும், தொழில் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் மத்திய வங்கிக்கும் அனுப்பப்படவேண்டிய எல்லா விபரத்திரட்டுக்களிலும், அத்தகைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தை, அல்லது முறையே, தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயருக்கு நேரொத்ததாகவுள்ள பெயருக்கு, அல்லது தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் எந்தப் பெயருக்கு அடையாளங்காணல் இலக்கம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்தப் பெயருக்கு ஊழியரொருவருக்குத் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்தளிக்கப்பட்ட அடையாளங்காணல் இலக்கத்தைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஊழியரும் அவரது இடது பெருவிரலினதும் வலது பெருவிரலினதும் விரலடையாளங்களை இலத்திரனியற் பதிவேடென்ற வடிவத்தில், தொழிற்றிணைக்களத்துடன் பதிவுசெய்தல் வேண்டும்.";

(2) 7 ஆம் ஒழுங்குவிதியில், (2) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(2) (அ) சட்டத்தின்கீழ் நிதியத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும், ஆகக்குறைந்தது ஐம்பது ஊழியர்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ளவருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும், உதவுதொகைகளைச் செலுத்துவதற்குப் பதிவுசெய்யும் நேரத்தில், பொருளளவில் இதற்கான நான்காம் அட்டவணையின் EM-1 இலுள்ள இலத்திரனியல் விபரத்திரட்டு முறைமையிலான பதிவுசெய்தல் படிவமொன்றை இலங்கை மத்திய வங்கிக்கானவொரு பிரதியுடன் தொழில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்."

(ஆ) நிதியத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்துவதற்கு 7 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் ஆளாகவுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், பொருளளவில் இதற்கான ஐந்தாம் அட்டவணையின் EM-2 மற்றும் EM-3 என்ற கணனிக் கோப்புப்படிவங்களில் அடுத்துவரும் மாதத்தின் முடிவுக்குப் பிந்தாமல் இலங்கை மத்திய வங்கிக்கான பிரதியொன்றுடன் தொழில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மாதாந்த விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) 7 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"7அ. ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவர் சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், அவ்வாறு செய்வது உசிதமானது அல்லது விரும்பத்தக்கது என அவர் கருதினால், தொழில்தருநரினால் தயாரிக்கப்பட்டதும் அவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான இலத்திரனியல் ரீதியிலான ஏதேனும் விபரத்திரட்டின் அச்சிடப்பட்ட பிரதியை வழங்கும்படி தொழில்தருநருக்கு வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன், தொழில்தருநர் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.".

(4) 8 ஆம் ஒழுங்குவிதியில், "படிவம் ஈ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிவம் ஈ (1) உடன் படிவம் "ஈ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.".

(5) 9 ஆம் ஒழுங்குவிதியில், "இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் இ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்துக்கேற்ப, இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் இ அல்லது ஐந்தாம் அட்டவணையின் EM-2 மற்றும் EM-3 என்ற கணனிக் கோப்புப் படிவங்கள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

(6) 31 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"31அ. சட்டத்தின் 23அ என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நன்மையின் கொடுப்பனவுக்கான ஒவ்வோர் உரிமைக்கோரிக்கையையும், பொருளளவில் இதற்கான இரண்டாம் அட்டவணையின் படிவம் ஓ இல் இருத்தல் வேண்டும்.".

(7) 33 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும் :-

"33அ. (1) (அ) சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக, வீடமைப்பு நன்மைகளுக்குத் தகைமை பெறுவதற்கு, பின்வரும் ஆவணங்கள் எல்லா உறுப்பினர்களினாலும் காண்பிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்காக, ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது ஒரு வீட்டைக் கொள்வனவு செய்வதற்காக-

(i) ஊழியரின் பெயரில் காணியின் சொத்தாண்மை உறுதி ;
(ii) அந்தந்தப் பிரதேச சபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டின் வரைபடம் ;

(iii) காணியின் சொத்தாண்மையை உறுதிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசுவிடமிருந்தான சான்றிதழ் ;

(iv) ஊழியர் காணியின் அல்லது வீட்டின் சொந்தக்காரராக இராதிருப்பின், ஊழியருக்குக் காணியை அல்லது வீட்டை விற்பனை செய்வதற்கான விற்பனையாளரின் சம்மதம் பற்றி அவரிடமிருந்தான கடிதமொன்று ;

(v) ஒரு பிரசித்த நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஊழியரின் அல்லது காணியின் அல்லது வீட்டின் விற்பனையாளரின் சொத்தாண்மை உறுதியின் மற்றும் உரித்து அறிக்கையின் அத்துடன் மரபுவழியின் பிரதி.

(ஆ) வீடமைப்பாதனத்தின் ஈட்டை மீட்பதற்காக-

(i) ஈட்டுறுதி ;

(ii) ஈட்டின் பெறுமதியும் செலுத்தப்படவேண்டிய மீதித்தொகையும் இயைபான வங்கி முகாமையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, செலுத்தப்படவுள்ள மீதித்தொகை ;

(இ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கடனொன்றை கொடுத்துத் தீர்ப்பதற்காக-

(i) ஊழியரினால் எடுக்கப்பட்ட வீடமைப்புக் கடன் பற்றிய வங்கி முகாமையாளரின் சான்றிதழும் முறையான வங்கி முகாமையாளரிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட தொகையும் ;

(ii) இயைபான வங்கி முகாமையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, செலுத்தப்படவுள்ள மீதித்தொகை ;

(ஆ) சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக, மருத்துவச் சிகிச்சை நன்மைகளுக்குத் தகைமைபெறுவதற்குப் பின்வரும் ஆவணங்கள் எல்லா உறுப்பினர்களினாலும் காண்பிக்கப்படுதல் வேண்டும் :-

(i) சுகாதாரக் கண்காணிப்பாளரிடமிருந்தான அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அரசாங்க மருத்துவமனையின் அலுவலரொருவரிடமிருந்தான சான்றிதழ் ; அல்லது

(ii) ஒரு தனியார் மருத்துவமனையின் நிருவாக முகாமையாளரிடமிருந்தான ஒரு கடிதத்துடன், நிதியத்தின் உறுப்பினருக்கு, அவரது வாழ்க்கைத்துணைக்கு அல்லது அவரது பிள்ளைகளுக்குச் சிகிச்சையளித்த மருத்துவரிடமிருந்தான சான்றிதழ் ;

(இ) இவ்வொழுங்குவிதியில் ''வீடமைப்பு'' மற்றும் ''மருத்துவச் சிகிச்சை'' என்பன, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் ஊழியரினால் பெறப்படற்பாலதான நன்மையின் ஆகக்கூடிய தொகை இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது.'';

(8) 42 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலமும் :-

''(எ) நிதியத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வோர் ஊழியரும், நிதியத்தில் அவரது தனிப்பட்ட கணக்கின் வரவுக்கு ஏதேனும் பணத்தொகை இருக்கும்வரை அதன் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.''.

(9) 61 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியில் ''பணக்கட்டளைமூலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பணக்கட்டளைமூலம், வங்கி நேரடிப் பற்று முறைமை மூலம், வர்த்தக வங்கி தன்னியக்கமாக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை மூலம்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(10) 66 ஆம் ஒழுங்குவிதியில்-

(அ) ''ஆணையாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

''இலத்திரனியற் பதிவேடு'' என்பது, ஓர் எழுத்திலான ஆவணம், அல்லது இலத்திரனியல் வழிவகைகள்மூலம் உருவாக்கப்பட்ட, தேக்கிவைக்கப்பட்ட, தோற்றுவிக்கப்பட்ட, பெறப்பட்ட, அல்லது அறிவிக்கப்பட்ட வேறு பதிவேடு என்று பொருளாகும் ; அத்துடன்

(ஆ) ''உறுப்பினர்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"விபரத்திரட்டுக்கள்'' என்பது, இலத்திரனியல் விபரத்திரட்டுக்களையும் இலத்திரனியல் பதிவேடுகளையும் உள்ளடக்கும் ;"

(11) அதற்கான இரண்டாம் அட்டவணையில்-

(அ) "படிவம் ஈ" என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

*(ஒழுங்குவிதி 8)*

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம்**

*படிவம் ஈ1*

தொழில் ஆணையாளர் தலைமையதிபதி,
ஊழியர் சகாய நிதியம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு 05.

1. தாபனத்தின் அல்லது தோட்டத்தின் பெயர் :....................................................

2. ஊழியர்களின் விபரங்கள் :

| இல. | ஊழியர் பெயர் | முகவரி | நியமிக்கப் பட்ட திகதி | தே. அ. அ. இல. | நியமிக்கப் பட்ட திகதியன் றுள்ள சம்பளம் | தொழிலின் தன்மை | பிறந்த திகதி | முன்னைய உறுப்பாண்மை இலக்கங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| 4 | | | | | | | | |
| 5 | | | | | | | | |
| 6 | | | | | | | | |
| 7 | | | | | | | | |
| 8 | | | | | | | | |
| 9 | | | | | | | | |
| 10 | | | | | | | | |

(அவசியமாயின் தனிவேறான தாள்களை இணைக்கவும்.)

3. தொழில்தருநரின் விபரங்கள் :

(அ) **தொழிலின் தன்மை** (தோதான பெட்டியைக் குறியிடவும்)

| | | | |
|---|---|---|---|
| தனி உரிமையாண்மை | | அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பு | |
| பங்காண்மை | | அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டம் | |
| கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனி | | கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் | |
| பகுதியளவிலான அரசாங்க நிறுவனம் | | ஏனையவை | |

(ஆ) **தொழில்தருநரின்/தொழில்தருநர்களின் விபரங்கள் :**

| இல. | தொழில்தருநரின்/பங்காளரின்/ பணிப்பாளரின் பெயர் | தனிப்பட்ட முகவரி | தே. அ. அ. இல. (கடவுச்சீட்டு இல.) | தொடர்பிலக்கம் | மின்-அஞ்சல் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

(அவசியமாயின் தனிவேறான தாள்களை இணைக்கவும்.)

4. ஊ. ச. நி கொடுப்பனவுகள் முன்னர் செய்யப்பட்டிருப்பின் எந்த இலக்கத்தின்கீழ் என்பதைச் சுட்டிக்காட்டவும் : ..........................................................................................................................................................................................

5. சொத்தாண்மையில் ஏதேனும் மாற்றமிருப்பின், அம்மாற்றங்களும் திகதிகளும் பற்றிய அத்தகைய விபரங்களை உங்களுக்குத் தெரிவிக்க உடன்படுகின்றேன்.

................................,
தொழில்தருநரின் கையொப்பம்.

தொழில்தருநரின் இலச்சினை :
தொழில்தருநரின் பதவிப்பெயர் :
திகதி :

(இ) "படிவம் ண" என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

(ஒழுங்குவிதி 31அ)

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம்**

படிவம் "த"

பாகம் 1

சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலனவான நன்மைகளுக்காக 26 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கை.

(ஊழியரின் தொழில்தருநரின் மூலம் இவ்வுரிமைக்கோரிக்கை தொழில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.)

1. உறுப்பினரின் முழுப்பெயர் :..................................................................

2. முகவரி :..................................................................

3. உறுப்பினரின் தகப்பனினது முழுப்பெயர் :..................................................................

4. உறுப்பினரின் தாயினது முழுப்பெயர் :..................................................................

5. உறுப்பினரின் வாழ்க்கைத்துணையினது முழுப்பெயர் (திருமணம் முடித்திருப்பின்) :..................................................................

6. உறுப்பினரின் பிள்ளைகளினது முழுப்பெயர் :..................................................................

பிறந்த திகதி :..................................................................

7. உறுப்பினரின் எவையேனும் இயற்கையான வேறு பிரித்துக்காட்டுகின்ற அடையாளங்கள் :..................................................................

8. உறுப்பாண்மை இலக்கங்கள் (தொழில்தருநரின் இலக்கத்தையும் உறுப்பினரின் இலக்கத்தையும் கூறவும் ; உறுப்பாண்மை அட்டை – "பி" படிவத்தையும் இணைக்கவும்)

| | தொழில்தருநரின் இலக்கம் | | | | | ஆங்கில நெடுங் கணக்கு எழுத்து | உறுப்பினர் இல. | | | | | விட்டுநீங்கிய திகதி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) தற்போதைய தொழில்தருநரின்கீழ் ஊழியரின் விபரங்கள் | | | | | | | | | | | | ஆ | ஆ | ஆ | ஆ | மா | மா | தி | தி |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| (ஆ) முன்னைய தொழில்தருநர்களின் கீழான முன்னைய உறுப்பாண்மை இலக்கங்கள் | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

9. உறுப்பினரின் வயதும் பிறந்த திகதியும் :..................................................................

10. ஊ. ச. நிதியக் கணக்கிலிருந்து 30% நன்மை எந்த வகுதியின்கீழ் உரிமை கோரப்படுகின்றதோ அந்த வகுதி :..................................................................

11. தற்போதைய தொழில்தருநரின் பெயரும் முகவரியும் :..................................................................

---

தேசிய அடையாள அட்டையின் விபரங்கள் :

---

தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்ற பெயர் :..................................................................

தேசிய அடையாள அட்டை இல. :..................................................................

வழங்கிய திகதி :..................................................................

**இத்துடன் மேலதிகமாக, தொழில்தருநரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்று இணைக்கப்படுதல் வேண்டும்.**

**வங்கிக் கணக்குகளை வைத்திருப்போருக்காக**

*கணக்கின் வகை - (சேமிப்பு /நடப்புக் கணக்கு) :-* *வங்கியின் பெயர் :-*

*கணக்கு இல. -* *வங்கிக் கிளை :-*

***நடப்புக் கணக்கின் விபரமான பக்கத்தின்/மாதாந்த வங்கிக் கூற்றின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.***

*மேற்கூறப்பட்ட வங்கியிலுள்ள எனது வங்கிக் கணக்குக்கு வரவு வைப்பதனை இயலச் செய்கின்ற காசோலைக்காகக் கட்டளையிடவும்.*

...................................
*உறுப்பினரின் கையொப்பம்* *திகதி :-*

**பெயர்ச் சான்றிதழ்**

*பிறப்புச் சான்றிதழ்/திருமணச் சான்றிதழில் உள்ள பெயர் :-*

*தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயர் :-*

*"பி" அட்டையிலுள்ள பெயர் (உறுப்பாண்மை அட்டை) :-*

*இலங்கை மத்திய வங்கியில் ஊ.ச.நி கணக்கிலுள்ள பெயர் :-*

*மேற்குறிப்பிடப்பட்ட பெயர்கள் ஒரே ஆளைக் குறிப்பீடு செய்கின்றனவென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.*

.....................................
*தொழில்தருநரின் கையொப்பம்.*

| **உறுப்பினரின் பெருவிரலடையாளங்கள்** | | |
|---|---|---|
| **இடது** | **வலது** | *உறுப்பினரின் கையொப்பத்துக்கும் பெருவிரலடையாளங்களுக்குமான சாட்சியின் கையொப்பம் :-* ................................................................<br>*சாட்சியின் பெயரும், பதவிப் பெயரும் முகவரியும் :-* ...................................................................... |

**பாகம் II (தொழில்தருநரினால் நிரப்பப்படுதல் வேண்டும்)**

*.................................. இல் அமைந்துள்ள ................................. இன் முகாமையாளரான/கண்காணிப்பாளரான/உரிமையாளரான ................................. ............................... ஆகிய நான்/நாம், ................................... உறுப்பாண்மை இலக்கத்தைக் கொண்ட ........................................ என்பவர், மேலேயுள்ள தோட்டத்தில்/தாபனத்தில் .......................... என்பவராகத் தொழிலுக்கமர்த்தப்பட்டாரென்றும், அவர்/அவள் ஊழியர் சகாய நிதியத்தின் உறுப்பினரொருவரென்றும், இவ்விண்ணப்பத்தின் விடயம் 10 இல் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையின் கீழ் அவர்/அவள் உரிமைகோருகின்றாரென்றும், அவரது/அவளது உதவுதொகை மத்திய வங்கிக்கு முழுமையாக அனுப்பப்பட்டுள்ளதென்றும், கடந்த மாதத்தின் உதவுதொகைகள், 20......... ஆம் ஆண்டு ................... மாதத்துக்கான உதவுதொகைக்காக விபரக்கூற்றில் சேர்க்கப்பட்டனவென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்/றோம்.*

*தொழில்தருநரின் இலக்கம்*.................................... *கையொப்பம் :-* .........................................

*திகதி :-* ....................................................

2-G016107

*(12) மூன்றாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணைகளை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*(படிவத்தை நிரப்புமுன்னர் மறுபுறத்தில் கொடுக்கப்பட்ட எல்லா அறிவுறுத்தல்களையும் வாசிக்கவும்.)*

**நான்காம் அட்டவணை**

*(படிவத்தை ஆங்கில முதலெழுத்துக்களில் நிரப்பவும்)*

EM*1*

[ஒழுங்குவிதி 7(2) (அ)]

**பதிவு செய்தல் படிவம் - ஈ - விபரத்திரட்டு முறைமை ஊழியர் சகாய நிதியம்**

தொழில் ஆணையாளர் தலைமையதிபதி (ஊசநி)
கண்காணிப்பாளர் (ஊசநி)

................................/............................ ஆம் இலக்க ஊசநி பதவிலக்கத்தைக் கொண்டுள்ள நான்/நாம் ................. (தொழில்தருநரின் பெயர்), 20................. ஆம் ஆண்டு ....................................... மாதத்திலிருந்து ஈ - விபரத்திரட்டு முறைமை மூலம் ஊசநி உதவு தொகை விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கு உடன்படுகின்றேன்/றோம்; அத்துடன் பின்வரும் விபரங்களை வழங்குகின்றேன்/றோம்.

01. தொழில்தருநரின் விபரங்கள் :

1.1 தொழிலின் பெயர் :

1.2 தொழில்தருநரின் இலக்கம் : ☐ / ☐☐☐☐☐

1.3 அஞ்சல் முகவரி :

1.4 கைத்தொழிலின்/தொழில் முயற்சியின் தன்மை :

2. ஊழியர்களின் எண்ணிக்கை

2.1 ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை : ☐☐☐☐  ஆ மா தி ☐☐☐☐☐☐ அன்றுள்ளவாறு

2.2 கடை, அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை : ☐☐☐☐

2.3 சம்பளச் சபைகள் சட்டத்தின் கீழ் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை : ☐☐☐☐

2.4 ஏனைய வகுதிகளின் கீழ் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை : ☐☐☐☐

3. ஈ– விபரத்திரட்டுக்களாக அனுப்பப் பட்ட கோப்புகளின் எண்ணிக்கை : ☐☐

4. தொழில்தருநரின் கடிதத்தொடர்பு விபரங்கள் :

*4.1* தொடர்பலுவலர்களின் பெயர்கள் : i.
ii.

*4.2* தொலைபேசி இலக்கங்கள் : i.
ii.
கையடக்கம் : iii.
நிலையானது : iv.

*4.3* தொலைநகல் இல. :

*4.4* மின்னஞ்சல் முகவரி (பிரதானமானது) : i.

*4.5* மின்னஞ்சல் முகவரிகள் (விரும்பியவை) : ii.
iii.

5. கொடுப்பனவுமுறை : காசோலை ☐ நேரடிப்பற்று ☐ காசு ☐

ஏனையவை (குறித்துரைக்கவும்) ☐

6. ஈ-விபரத்திரட்டுக்களின் முறை : ஊசநி மின்னஞ்சல்/இணையத்தளம் ☐

ஏனையவை (குறித்துரைக்கவும்) ☐

7. ஈ - விபரத்திரட்டுக்களை அனுப்புவதற்குத் தொடங்கும் மாதம் ஆ மா தி

மேலே வழங்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதுமென நான்/நாம் இத்தால் வெளிப்படுத்தி உடன்படுகின்றேன்/றோம் என்பதுடன், இப்படிவத்திலுள்ள தகவலின் ஏதேனும்மூலத்தை ஊசநி சரிபார்க்கலாம்; அத்துடன் முன்னைய எல்லாத் தகவல்களிலும் மேலோங்கி நிற்கும் இதன்கண் வழங்கப்பட்ட தகவலுடனான ஊசநிதியத்துடன் எனது/எமது தொழில் விபரங்களை நாளதுவரையாக்கவதற்கு வெளிப்படையாகச் சம்மதிக்கின்றேன்/றோம். கொடுக்கப்பட்ட விபரங்கள் பற்றிய ஏதேனும் மாற்றம் உடனடியாக அறிவிக்கப்படும்.

*8.* அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் இலச்சினையும்

திகதி

**ஐந்தாம் அட்டவணை**

EM 2 [ஒழுங்குவிதி 7(2)(ஆ)]

கொடுப்பனவு விபரக்கோப்பு (EVEMP.TXT எனப் பெயரிடப்படுதல் வேண்டும்)
கோப்பின் பெயர் : (ஊசநி பதிவில. +P)+txt.

| *இல.* | *துறை* | *நீளம்* | *வகை* | *விவரணம்* |
|---|---|---|---|---|
| 1 | வலயக் குறியீடு | 1 | உரை | வலயக் குறியீடு |
| 2 | தொழில்தருநரின் இல | 6 | முழு எண் | தொழில்தருநரின் இலக்கம் |
| 3 | உதவுதொகை காலப்பகுதி | 6 | முழு எண் | உதவுதொகை செலுத்தும் ஆண்டும் மாதமும் |
| 4 | அடையாள அட்டை சமர்ப்பித்தல் | 2 | முழு எண் | தரவு சமர்ப்பிப்பு இலக்கம் * |

| இல. | துறை | நீளம் | வகை | விவரணம் |
|---|---|---|---|---|
| 5 | மொத்த உதவுதொகை | 11.2** | முழு எண் | உதவுதொகையின் மொத்தத் தொகை |
| 6 | உறுப்பினரின் எண்ணிக்கை | 5 | முழு எண் | எவ்வுறுப்பினர்களுக்காக உதவுதொகை செலுத்தப் பட்டதோ அவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கை |
| 7 | செலுத்தும் முறை | 1 | முழு எண் | கொடுப்பனவு முறை<br>1=காசோலை 2 =காசு 3= பணக்கட்டளை<br>4=நேரடிப்பற்று |
| 8 | கொடுப்பனவுக் குறிப்பீடு | 20 | உரை | கொடுப்பனவுக் குறிப்பீடு (வங்கிக் குறியீடு, கிளைக் குறியீடு மற்றும் காசோலை இல.) |
| 9 | கொடுப்பனவுத் திகதி | 10 | முழு எண் | கொடுப்பனவுத் திகதி (ஆமாதி) |
| 10 | மா/அ குறியீடு | 2 | உரை | மாவட்ட அலுவலகக் குறியீட்டு இல.<br>(பின்னிணைப்பு 9 ஐப் பார்க்கவும்) |

* கோப்பானது ஒரு கோப்பாக அனுப்பப்படின் (எல்லாப் பணியாட்தொகுதியினரும் உட்பட) இலக்கம் “01” ஆக விருத்தல் வேண்டும். “நிறைவேற்றுநர் தர” மற்றும் “நிறைவேற்றுநர் தரமல்லாத” போன்ற இரு வகுதிகளின் கீழ் அனுப்பப்படின், இலக்கம் “02” ஆகவிருத்தல் வேண்டும்.

11.2 ** = 9 முற்றெண்கள், பதின்மப்புள்ளி மற்றும் 2 பதின்மானங்கள் உட்பட, ஆகக் கூடியது 12 எண்கள் இருத்தல் வேண்டும்.

[ஒழுங்குவிதி 7(2) (ஆ)]

EM3

**கொடுப்பனவு விபரக்கோப்பு (EVEMC.TXT எனப் பெயரிடப்படுதல் வேண்டும்)**

கோப்பின் பெயர் : (ஊசநி பதிவில. +C)+txt.

| இல. | துறை | நீளம் | வகை | விவரணம் |
|---|---|---|---|---|
| 1 | தேஅஅ இலக்கம் | 20 | உரை | தேஅஅ/கடவுச்சீட்டு இலக்கம் |
| 2 | கடைசிப் பெயர் | 40 | உரை | கடைசிப் பெயர் |
| 3 | முதலெழுத்துக்கள் | 20 | உரை | முதலெழுத்துக்கள் |
| 4 | உறுப்பினரின் இலக்கம் | 6 | முழு எண் | உறுப்பினரின் கணக்கிலக்கம் |
| 5 | மொத்த உதவுதொகை | 9.2* | முழு எண் | உதவுதொகையின் மொத்தத் தொகை (ரூபா) |
| 6 | தொழில்தருநரின் உதவுதொகை | 9.2* | முழு எண் | தொழில்தருநரின் உதவுதொகை (ரூபா) |
| 7 | உறுப்பினரின் உதவுதொகை | 9.2* | முழு எண் | உறுப்பினரின் உதவுதொகை (ரூபா) |
| 8 | மொத்த ஈட்டுகைகள் | 11.2** | முழு எண் | மொத்த ஈட்டுகைகள் (ரூபா) மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு நீங்கலாக மாதத்துக்கான<br>* மொத்த வேதனம் அல்லது சம்பளம்<br><br>*அடிப்படை வேதனம் அல்லது சம்பளம், வாழ்க்கைச் செலவுப்படி, துண்டு வேலை வீதங்கள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றை இது உள்ளடக்குதல் வேண்டும். |

| இல. | துறை | நீளம் | வகை | விவரணம் |
|---|---|---|---|---|
| 9. | உறுப்பினர் அந்தஸ்து | 1 | உரை | உறுப்பினர் அந்தஸ்து<br>உ=உள்ளவர், பு=புதியவர், வ=வறிதாக்கியவர் |
| 10. | வலயக் குறியீடு | 1 | உரை | வலயக் குறியீடு |
| 11. | தொழில் தருநரின் இலக்கம் | 6 | முழு எண் | தொழில் தருநரின் இலக்கம் |
| 12. | உதவுதொகைக்காலப்பகுதி | 6 | முழு எண் | உதவுதொகை செலுத்தும் ஆண்டும் மாதமும் |
| 13. | அடையாள அட்டை சமர்ப்பித்தல் | 2 | முழு எண் | தரவு சமர்ப்பிப்பு இலக்கம் *** |
| 14. | நாள் வேலை | 4.2 | முழு எண் | வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை |
| 15. | தான் புரிதொழில் தரம் | 3 | முழு எண் | தான்புரிதொழில் வகுப்பாக்கத் தரம் (குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் வகுப்பாக்கத்தின்படி) பின்னிணைப்பு 8 இனைப் பார்க்கவும்) |

9.2* =7 முற்றெண்கள், பதின்மப்புள்ளி மற்றும் 2 பதின்மானங்களுட்பட, ஆகக் கூடியது 10 எண்கள் இருத்தல் வேண்டும்.

11.2** = 9 முற்றெண்கள், பதின்மப்புள்ளி மற்றும் 2 பதின்மானங்கள் உட்பட, ஆகக்கூடியது 12 எண்கள் இருத்தல் வேண்டும்.

*** கோப்பானது ஒரு கோப்பாக அனுப்பப்படின் (எல்லாப் பணியாட்டொகுதியினரும் உட்பட) இலக்கம் "01" ஆகவிருத்தல் வேண்டும். "நிறைவேற்றுநர் தர" மற்றும் "நிறைவேற்றுநர் தரமல்லாத" போன்ற இரு வகுதிகளின் கீழ் அனுப்பப்படின், இலக்கம் "02" ஆகவிருத்தல் வேண்டும்.

13. (1) இவ்வொழுங்குவிதிகள் இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாட்டுக்கமைய அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும் ;

(2) இவ்வொழுங்குவிதியின் 6 ஆம் மற்றும் 7 ஆம் ஒழுங்குவிதிகள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கடைசியாகத் 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதிச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.